ஓரெழுத்து ஒரு மொழிகள், பகுபதம், பகாப்பதம்.

1.நன்னூல் இலக்கண நூலின் ஆசிரியர் பவணந்தி முனிவர்

2.ஓரெழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவது ஓரெழுத்து ஒரு மொழி

3.தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை 42.

குறில் 2 (நொ,து,) நெடில் 40.

4. சிறு சிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமைந்த சொற்கள் பகுபதங்கள்.

5.பிரிக்கப்படும் உறுப்புகள் பகுபத உறுப்புகள்.

6. பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

எடுத்துக்காட்டுகள்:

7.பொருள் – பொன்னன் (பொன் + அன்)

8. இடம் – நாடன் (நாடு + அன்)

9. காலம் – சித்திரையான் (சித்திரை + ஆன்)

10. சினை – கண்ணன் (கண் + அன்)

11. பண்பு – இனியன் (இனிமை + அன்)

12.தொழில் - உழவன் (உழவு + அன்)

13.பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

14.பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

15.அவை - பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

16.பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி.

17.பகுதி கட்டளையாகவே அமையும்.

18. பகுபதத்தின் இறுதியில் அமைந்து திணை, பால் முற்று, எச்சம் ஆகியவற்றைக் காட்டுவது விகுதி ஆகும்.

19. பகுபதத்தின் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைக் காட்டுவது இடைநிலை ஆகும்.

20. பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.

21. பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.

22. பகுதி, விகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

23. பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் எனப்படும்.

24. பகாப்பதம் அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.

25. பெயர்ப் பகாப்பதம் நிலம், நீர், நெருப்பு, காற்று.

26. வினைப் பகாப்பதம் – நட, வா, படி, வாழ்.

27. இடைப் பகாப்பதம் – மன், கொல், தில், போல்.

28. உரிப் பகாப்பதம் – உறு, தவ, நனி, கழி.